உ

சிவ சிவா

ஸ்ரீ பால சித்த குரவே நம:

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் துணை



# வீரசைவ சிவ பூசாவிதி

(தமிழ் சுருக்கம்)

ஆக்கியோன் :

**சிவத்திரு. அடிகளாசிரியன்**

சித்தநாதேச்சுராதீனம்; திருவருள் நிலையம்

கூகையூர்

வெளியிடுவோர் :

**சிவத்திரு அ. சண்முகசிகாமணி ஐயர்**

1997) (இலவச வெளியீடு

சிவ சிவா

ஸ்ரீ பாலசித்த குரவே நம :

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் துணை

# வீரசைவ சிவ பூசாவிதி

## திருமண விழா மலர்



மணமக்கள் :

ச. பிரபாகர், M.P.E.S.,

ப. சுலோச்சனா, M.A., B.Ed.,

நிகழிடம் : கள்ளக்குறிச்சி

திருவள்ளுவராண்டு 2028

புரட்டாசித் திங்கள் 20-ஆம் நாள்

**6-10-1997**

# முன்னுரை

தமிழ் நாட்டில், தமிழ் அறிந்த மக்களுக்குப் பயன் படுமாறு, தமிழில், வீரசைவ **சிவபூசாவிதி** யொன்று எழுதித் தரும்படி **சிதம்பரம், அண்ணாமலை நகர் உயர்திரு. சி. சோமசுந்தரனார், M.A., L.T.,** அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் கூறியதை ஏற்றுக்கொண்டு, சுருக்கமாக யான் இப்பூசாவிதியை ஆக்கியுள்ளேன். சமயப் பேரறிஞர்கள் இதனைப் படித்துப்பார்த்து, வேண்டும் திருத்தங்களை எனக்கு அறிவித்தால், அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்ளலாம். இதனை, குறிஞ்சிப்பாடியை சார்ந்த மீனாட்சிப்பேட்டையில் உள்ள திருமுருகன் திருக்கோயிலை பூசித்து வரும் பூசகர் மரபில் உள்ளவரும் மயிலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் உயர்நிலைப் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக இருந்தவருமாகிய **சிவத்திரு. அ. சண்முகசிகாமணி** அவர்களின் புதல்வர்

திருநிறைசெல்வர் **ச. பிரபாகர்.**

திருநிறைசெல்வி **ப. சுலோச்சனா**

என்னும் மணமக்களுடைய திருமண விழாக் காலத்தின் போழ்து இச்சிவ பூசா விதிமுறை நூல் வெளியிடப்படுகிறது இறைவன் திருவருளால் மணமக்கள் எல்லா நலனும் பெற்று வாழ்ந்திருக்குமாறு என் வாழ்த்துரையைக் கூறுகின்றேன்.

இங்ஙனம்,

**சிவத்திரு. அடிகளாசிரியன்,**

குகையூர் அஞ்சல் - 606 301

நயினார்பாளையம் (வழி)

விழுப்புரம் மாவட்டம்.

உ

இறைவன் துணை

# வீரசைவ சிவ பூசாவிதி

**வீரசைவன்** ஒவ்வொரு நாளும் இரவில் உறங்கச் செல்லும் பொழுது, தன் ஆசிரியனையும், இட்டலிங்கப் பெருமானையும் தியானம் செய்துகொண்டு உறங்கச் செல்க பின் வைகறையில் துயிலெழுந்து. ஆசிரியனையும் இட்டலிங்கப் பெருமானையும் தியானம் செய்க.

பின்னர் விதிப்படி மலசலம் கழித்து, தூய்மை செய்துக் கொண்டு, பல் விளக்கிக் கொள்க,

அதன் பின், தூய நீரில்,

''வானத் தேமுகி லாகி வளந்தரும்
ஞான மேவடி வாகிய நாதனே!
ஆன நின்னருள் வெள்ளம் படிந்தனன்
ஈன மாய அழுக்குகள் ஏகவே''

என்னும் மந்திரத்தைக் கூறிக்கொண்டு நீராடுக. பின்னர் தூய உடையை உடுத்திக் கொண்டு,

''மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோம்
கால மேஉனை என்றுகொல்காண்பதே''

என்னும் திருவாசகப் பாட்டைக் கூறிக்கொண்டு பூசையிடத்திற்குச் செல்க.

''கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்து
உற்றிருமாந் திருந்தேன்எம் பெருமானே! அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே''

என்னும் திருவாசகப் பாட்டைக் கூறி, உட்காரும் இருக்கையை மலரிட்டுப்பூசித்து அதில் கிழக்கு முகமாயேனும் வடக்கு முகமாயேனும் உட்காருக. பின்னர்,

ஓம் ஆத்ம தத்வாய சுவாகா
ஓம் வித்யா தத்வாய சுவாகா
ஓம் சிவதத்வாய சுவாகா

என்னும் மந்திரத்தைக் கூறிக்கொண்டு, ஆசமனம் (முக்குடி நீர்) செய்து கொள்க.

பின்னர் ஒரு செம்பில் தூய நீரை நிறைத்து, அதில் ஓம் என்னும் பிரணவத்தை எழுதி, செம்பின்மேல் வலக்கையை வைத்து,

''காவிரி கங்கை சிந்து
கலித்தநன் மதையி ளேடே
பூவிரி யமுநை வாணி
பொருநையும் கடல்கள் ஏழும்
நாவிரி சொல்லாற் போற்ற
நன்கெழுந் தருளி, இங்கே
தேவிரி பயனைச் செய்யத்
தெரிவுற வணங்கி னேமே.''

என்னும் மந்திரத்தைச் சொல்லி மந்திரித்து, அந்த நீரை சிவபூசைக் குரிய பொருள்கள் மேல் தெளிக்க. திசை தொறும் தெளிக்க பின்னர் பிராணுயாமம் செய்க, இதன்பின் 1. சங்கற்பம் செய்து கொண்டு, பஞ்சாசாரி யரையும், சிவபரம்பொருளையும் தியானிக்க.

---

1. சங்கற்பம் என்பது இன்ன காலத்தில், இன்ன இடத்தில், இன்ன பயன் கருதி, இன்ன காரியத்தை, இன்ன முறைப்படி செய்கிறேன் என்று எண்ணிக் கூறிக் கொள்வது.

## பஞ்சாசாரியர் தியானம்

அறிவினை விளக்கி இருளினைப் போக்கும்
ஐம்பெங் குரவரே! உங்கள்
நெறிதரும் அடியை மனத்தினால் நினைத்து,
நின்றிடும் பெரும்புகழ் கூறி,
செறிதரு மணஞ்சால் மலரினைத் தூவிச்,
சிவம்எனக் கைகளால் தொழுதோம்;
குறிதரு சிவத்தின் திருவருள் பெறவே
குறிக்கொடு அருள்செய வேண்டும்.

## சிவத் தியானம்

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா! ஆர்கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்!
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே! ஈசா! உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலனொர்கைம் மாறே
(திருவாசகம்)

பின்னர் பெருவிரல் நடுவிரல் மோதிர விரல்களால் (குரங்க முத்திரையால்) திருநீற்றை எடுத்து, இடக் கையில் வைத்து, மலர்களால் பூசித்து ஐந்தெழுத்தை ஏழு முறை கூறி மந்திரித்து

பேசிற்றாம் ஈசனே எந்தாய் எந்தை
பெருமானே என்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றான் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே என்று பின்றா
நேசத்தால் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ
என்னைநீ ஆட்கொண்ட வண்ணந் தானே.

என்னும் திருவாசகப் பாட்டினைக் கூறிக்கொண்டு மேற் கண்ட திருநீற்றைத் தூளிதமாக உச்சி, முகம், மார்பு கைகளில் அணிந்துகொள்க. பின்னர் தனக்கு வேண்டிய அளவு திருநீற்றை எடுத்து இடதுகையில் இட்டு, மேல் வலக்கையை மூடி.

அக்னிரிதி பஸ்ம வாயுரிதி பஸ்ம
ஜலமீதி பஸ்ம ஸ்தலமிதி பஸ்ம வியோமேதி பஸ்ம!
பஸ்மேதி பஸ்ம சர்வகம் ஹவா இதம் பஸ்ம மந
இத்யேதாநி சக்ஷுஂமஷி பஸ்மானி !!

என்னும் மந்திரத்தை ஏழு முறை கூறி, ஐந்தெழுத்தையும் ஏழு முறை கூறித் தண்ணீரில் குழைத்து, உச்சந்தலை முதலான பதினைந்து இடங்களில் ஐந்தெழுத்தைக் கூறி முக்குறியாக இட்டுக் கொள்க.

## I. பதினைந்து இடங்களாவன :-

(1) சென்னி (உச்சந்தலை)
(2) நெற்றி
(3-4) இருசெவி
(5) கண்டம்
(6-7) இரண்டு தோள்
(8) மார்பு
(9) உந்தி
(10) பிடரி
(11-12) இருவாகு (முழங்கை)
(13) முதுகு (கருத்தேசம்)
(14-15) மணிக்கட்டு

---

குறிப்பு :-1. ‘‘சென்னியொளிர் நுதலசெவிகள் களம் புயங்கள் அகலிதயம் சிறந்த வுந்தி, மன்னு பிடர் இருவாகு வொடுக்குத்தே சங்கவின் கூர் மணிபந்தங்கள், என்னவரு மூவைந்து தானத்தும் புனல்கலந்த இனிய நீற்றால், உன்னலரும் புகழ்த்திரிபுண் டரமிடுவர் மூலமனு வுரைத்து நல்லோர்’’ என்பது சித்தாந்த சிகாமணி.

பின்னர் உருத்திராக்க வடத்தைப் பூசித்துத்தலை முதலான இடங்களில் அணிந்து கொள்க. இதன்பின் ஆசிரியனால் உபதேசிக்கப்பட்ட அங்கந்நியாசம் கரந்நியாசங்களைச் செய்து கொள்க பிறகு

தூலமாய்ச் சூக்கம் ஆகித்
தோன்றுதற் கரிய தான
மூலமாய் விளங்கு கின்ற
முழுமுதற் பொருளே! போற்றி!
காலமும் கடந்த நீயென்
கரத்திலும், மனத்தும், நல்ல
சீலமார் அறிவின் கண்ணும்
சிவனிஎன் பூசை கொள்க

என்று இட்டலிங்கத்தைப் போற்றிக்கொண்டு இடது உள்ளங்கையை நீரால் தூய்மை செய்தபின். அதனை ஆதார சத்திவடிவாகத் தியானித்து, மலரிட்டு வணங்கிச் செச்சையிலுள்ள இட்டலிங்கத்தை எடுத்து, அவ்வுள்ளங் கையில் இடப்பக்கம் கோமுகம் இருக்கும்படி எழுந்தருளச்செய்து அபிடேகப் பொருள்களைக் கொண்டு முறையே அபிடேகம் செய்க.

# அபிடேக மந்திரம்

நரர்கள்தமின் அரசர்அவர் தமின்இனிய
திவ்வியாழ்நண்ணுநர கந்தருவர் தாம்,
நவிலும்அவர் தமின் அமர கந்தருவர்.
அவர்தம்மின் நாடரிய தேவர் அவரில்.

சுரரதிபன் அவனினுயர் சுரர் குரவன்
அவனின் அயன் சொல்முறையின் நூறுமடிமேல்
துன்னுசுகம் ஒரு திவலை அளவுமின்
றாகமிகு சுகவேலை புகல்ஈகுவாய்,

தரைமுதற் பூதங்கள் புத்திகுண
தத்துவம் தகுதிபெறு பகுதிபுருட,
தத்துவம் வித்தைமுத லனவெனும்இ
வற்றிலுறு சமயரென எமைவிடாமல்,

அருளில்நி னைஅடைதலுறும் அரியபதம்
அருளுமவன் அபிடேகம் ஆடியருளே,
அறிவுற்றென் அங்கைமலர் செறிவுற்
றமர்ந்த இறை அபிடேகம் ஆடியருளே,

என்று கூறி அபிடேகம் செய்து, அபிடேகம் முடிந்த பின், திருவொற்றாடையால் சிவலிங்கத்தின் மேலுள்ள தண்ணீரைத் துடைக்க.

# இட்டலிங்கத்திற்குத் திருநீறணியும் மந்திரம்

பாவம் தீய, இடர் நீங்கப்,
பகைநோய் போக்கிக் காப்பாற்ற,
மேவும் செல்வம் மிகவளர,
மேலாம் சிவத்தை விளைவிக்க
ஆவில் விளைந்த திருநீற்றை
அங்கை விளங்கும் பெருமானே!
மேவிப் பரவி உனக்களித்து
மிகவும் உருகிப் பணிகின்றேன்.

---

குறிப்பு :— திருநீற்றில் ஐந்து வகை உண்டு. கபில் நிறத்தையுடைய நந்தை என்னும் பசுவின் சாணத்தால் உண்டாக்கிய நீறுவிபூதி: இது செல்வம் நல்கும் கருமை நிறமுடைய பத்திரை என்னும் பசுவின் சாணத்தால் உண்டாக்கிய நீறு பசிதம்; இது சிவத்தை உண்டாக்கும் வெண்மை நிறத்தையுடைய சுரபி என்னும் பசுவின் சாணத்தால் உண்டாக்கிய நீறு பஸ்மம்; இது பாவம் போக்கும். புகை நிறத்தையுடைய சுசீலை என்னும் பசுவின் சாணத்தால் உண்டாக்கிய நீறு சாரம்; இது இடரை நீக்கும் செம்மை நிறத்தையுடைய சுமனை என்னும் பசுவின் சாணத்தால் உண்டாக்கிய நீறு இரட்சை; இது இரட்சிக்கும்.

(சித்தாந்த சிகாமணி)

## சந்தனக் குழம்பு அணியும் மந்திரம்

மூக்குற் நமர்ந்து மணமெல்லாம்
முகர்ந்து நிற்கும் பரம்பொருளே !
காக்கும் நல்ல காவலனே!
காண்டற் கரிய பேரொளியே !
ஆக்கும் மலயச் சந்தனத்தால்
அமைத்த மணஞ்சால் நற்குழம்பைத்
தேக்கும் அன்பால் நினக்களித்தேன்
திருவும் நிறைவும் தருவாயே.

## திருச்சுண்ணம் (அட்சதை) அணியும் மந்திரம்

பொறிகள் யாவையும், போகசா தனமெனும் புரமும்.
குறிகொள் என்கரத் தமர்ந்திடும் குழகனே! உன்றன்
நெறிகொள் பூசனை உறுப்பெனும் நினைவையேகொண்டு
வெறிகொள் அக்கதை அணிந்தனன் விருப்பெலாம் வளர

## வில்வம் அணியும் மந்திரம்

மூலகா ரணமாய் ஞான
மூர்த்தியாய் இன்ப மாகி
மேலதாய் உண்மை யாகி
விகற்பமோ டழிவு மின்றி
மாலிலா துலகி றந்த
பிரமமாம் மகாலிங் கேசா!
கோலநற் கூவி ளத்தின்
இளந்தளிர் அணிகின் றேனே.

## மலர் சூடும் மந்திரம்

பரந்துபல் லாய்மலர் இட்டுமுட் டாதுஅடி யேயிறைஞ்சி
இரந்தவெல் லாம்எமக் கேபெற லாமென்னும்
அன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை ஏத்த முழுவதுமே
(திருவாசகம்)

## அருச்சனை மந்திரம்

ஓம் இட்டலிங்க மூர்த்தியே நம :
ஓம் பிராணலிங்க மூர்த்தியே நம :
ஓம் பாவலிங்க மூர்த்தியே நம :
ஓம் ஆசாரலிங்க மூர்த்தியே நம :
ஓம் குருலிங்க மூர்த்தியே நம :
ஓம் சிவலிங்க மூர்த்தியே நம :
ஓம் சரலிங்க மூர்த்தியே நம :
ஓம் பிரசாதலிங்க மூர்த்தியே நம :
ஓம் மகாலிங்க மூர்த்தியே நம :

என்று அர்ச்சிக்க

## நிவேதன மந்திரம்

மாப்பலாத் தேங்கு நாவல் மாண்புள வாழை வெள்ளில்
நாப்புலம் விரும்பு கின்ற நால்வகை அடிசில் யாவும்
காப்புறும் முதல்வ னான கரதலத் தமர்ந்த தேவே!
கோப்புறப் படைத்து நின்றேன் கொண்டிட வேண்டும்
போற்றி

## தூபம் (நறுப்புகை) காட்டும் மந்திரம்

''தன்கரந் தன்னில் பொருளெலாம் பெற்றுத்
தரித்திரர் மகிழ்வடை வதுபோல்''
என்கரந் தன்னில் நின்னையான் பெறலால்
எண்ணிலா உவகையை அடைந்தேன்;
பொன்கரம் போலும் மேனியை உடையாய்!
புண்ணிய வடிவனே! அடியேன்
புன்கரந் தன்னால் நறுமணப் புகையைப்
பொருந்துறக் காட்டினேன் கொள்வாய்.

## தீபம் காட்டும் மந்திரம்

உள்ளொளி தனக்கும் புறவொளி தனக்கும்
ஊற்றமாம் பேரொளிப் பிழம்பே!
அள்ளொளி யாம்நின் அருள் ஒளி தன்னில்
அகிலமும் அமைந்திட அமைத்தாய்;
ஒள்ளொளி யில்லா அடியனேன் காட்டும்
ஒருசிறு ஒளியைன்ம் ஏற்று,
நல்லொளி நல்கி, நன்னெறி காட்டாய்
நான் கடைத் தேறிடும் பொருட்டே.

பின்னர் இட்டலிங்கப் பெருமான்மேல் அமைந்த துதிப் பாடல்களைக் கூறுக. அதன் பின் இட்டலிங்கத்தின் மேல் விழியை நிறுத்தி ஐந்தெழுத்தை 108 முறை செபிக்க பிறகு இட்டலிங்கத்தின் மேல் அணிந்துள்ள மலர்களை எடுத்துவிட்டுச் சிறிது தண்ணீரை இட்டலிங்கத்தின் மேல் விட்டு **பாதோதகமாகிய** அந்நீரை உட்கொள்க

இவ்வாறு சிவபாதோதகம் கொண்டபின் இட்டலிங்கத்திற்குச் சுருக்கமாக அபிடேகம் செய்துதிருநீறு அணிந்து மலர் சாத்தி வழிபட்டு அம்மலருடன், இலிங்கவஸ்திரத்துடன் இட்டலிங்கப் பெருமானைச் செச்சையுள் எழுந்தருளச் செய்க.

பின்னர், மந்திர தந்திர சுருக்கத்தின் பொருட்டும், வழுக்களின் பொருட்டும், அக்குற்றங்களை நீக்கி அருளுக என்று பெருமானை வேண்டிக் கொண்டு, பதினொறு முறை அஸ்த ஜெபம் செய்க.
அதன்பின் குரு வணக்கம் செய்து கொண்டு,

உருவமும் சுவையும் நிறைவையும் படைக்க
உடல்முதல் மூன்றினுள் இருப்பாய்!
திருவமர் சிவனே! சங்கர! இறைவ!
தெரிவிலா அடியனேன் இந்நாள்
குருஅருள் கூட்டப் பூசனை புரிந்தேன்
கொண்டுநீ அருள்செய வேண்டும்;
வருவினை யுடனே, நிகழ்வினை, முன்னாள்
வந்திடும் வினையெலாம் தீர்ப்பாய்.

என்று கூறிக்கொண்டு, அட்சதை, மலர் இவைகளை எடுத்து நீருடன், கடைசி விரலால் விட்டுச் சிவபூசையை முடிக்க

வீரசைவ சிவபூசா விதி முற்றும்.

# ஸ்தோத்திரம்

## இலிங்காஷ்டகம்

இலிங்கத்தின் பெருமை உணர்த்தும் எட்டுச்சுலோகங்கள்

பிரம்ம முராரி சுரார்ச்சித லிங்கம் நிர்மல பாஷித
சோபித லிங்கம் | ஜந்மச துக்க விநாசக லிங்கம்
தத்பிரண மாமி சதாசிவ லிங்கம் ||

தேவ முனிப்ரவ ரார்ச்சித லிங்கம் காம தகனகரு
ணாகர லிங்கம் | ராவண தர்ப்ப நிவாரக லிங்கம்
தத்பிரண மாமி சதாசிவ லிங்கம் ||

சுத்த சுகந்த சுலோபித லிங்கம் புத்தி விவர்த்தன
காரண லிங்கம் | சித்த சுராசுர வந்தித லிங்கம்
தத்பிரணமாமி சதாசிவ லிங்கம் ||

தக்ஷ சுயக்ஞ விநாசக லிங்கம் கநகமகாமணி
பூஷித லிங்கம் | பணிபதி வேஷ்டிந சோபித லிங்கம்
தத்பிரணமாமி சதாசிவலிங்கம் ||

குங்கும சந்தன லேபித லிங்கம் பங்கஜ ஹார சுசோ
பித லிங்கம் | சஞ்சித பாப விநாசக லிங்கம்
தத்பிரணமாமி சதாசிவ லிங்கம் ||

தேவ கணார்ச்சித சோபித லிங்கம் பாவைர் பக்திபிரா
ஸ்ரித லிங்கம் | தினகர கோடி பிரபாகர லிங்கம்
தத்பிரண மாமி சதாசிவ லிங்கம் ||

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம் சர்வே சமுத்பவ காரணலிங்கம் । அஷ்ட தரித்ர விநாக்ருத லிங்கம தத்பிரண மாமி சதாசிவ லிங்கம் ।

சுரகுரு சுரவர பூஜிதலிங்கம் சுரவந புஷ்ப சதார்ச்சித லிங்கம । பராம் பரம பரமாத்மிக லிங்கம் தத்பிரண மாமி சதாசிவ லிங்கம் ॥

## தமிழ்த் தோத்திரம்

''நின்றசீர் மாறன் முடிக்கணே என்றும்
நிகரற அணிந்ததைப் போன்றே''
உன்திரு வுருவை மார்பினில் அணியும்
ஒப்பில்லாச் சிறப்பினை உடையேன்;
பொன்றுறும் பொன்னால் அணிபல இயற்றிப்
புனைந்திடக் கருதிய திலையே;
ஒன்றெனும் இறைவ ! உடம்பிலும் உளத்தும்
உணர்ந்திடும் அறிவிலும் அமர்வோய்!

நாசியின்கண் வீற்றிருந்து மணத்தைக் கொண்டும்
நல்லதொரு நாவிருந்து சுவையை ஏற்றும்
தேசிருக்கும் விழியிருந்து வடிவைத் தேர்ந்தும்
திகழ்மேனி தனில்மேவி ஊற்றை உற்றும்
பேசிருக்கும் செவிமருவி இசையைப் பெற்றும்
பெரியஉளந் தனிலிருந்து நிறைவைக் கொண்டும்
ஆசிருக்கும் பிறவிநெறி அனைத்தும் மாற்றும்
அண்ணலே ! உனதுநிவே தனமே உண்பேன்.

தோத்திரம் முற்றும்.

உ

சிவ சிவா

ஸ்ரீ பாலசித்த குரவே நம :

ஸ்ரீ சிவப்பிரகாசர் துணை

"உங்களுடைய சொற்கள் ... ... ...

முத்துமாலையைப் போல் குளிர்ந்தும்,
பட்டை தீட்டப் பெற்ற
மணியைப் போல் ஒளி விட்டும்,
பளிங்கைப் போன்று
தூய்மை துலங்கியும் என்றும் இருக்கட்டும்.

— ஸ்ரீ பசவேசர்

# நன்றி மடல்

அன்புடையீர்! வணக்கம்

திருவள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாசி மாதம் திங்கள் கிழமை 20-ஆம் நாள் (6—10—1997) கள்ளக்குறிச்சி K. N. R. திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமண விழாவின் போது அருளாசி வழங்கிய மயிலம் பொம்மபுர ஆதீனம் 19-ஆம் பட்டம் **ஸ்ரீ ல ஸ்ரீ குருமகா சந்நிதானங்களின்** திருவடிகளைதொழுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

இவ்விழாவினைத் தங்களின் மேலான நல்வாழ்த்துக் களால் சிறப்பித்த சான்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களின் நெஞ்சார்ந்த **நன்றி**யினைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

மேலும் இவ்விழாச் சிறக்க உடலாலும், உள்ளத்தாலும், பல்வகையிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எங்களின் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

என்றும் அன்புடன்

அ. சண்முகசிகாமணி — ராஜேஸ்வரி

பொ. பசுபதி — இலட்சுமி

ச. பிரபாகர் — பி. சுலோச்சனா

